**Sub Court, Eraniel**

C.O.S. No.1/2025
Date: 12.02.2026.
PW1 - திரு. வின்செண்ட் ஜார்ஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

பிரதிவாதி உடன் எனக்கு பழக்கம் இல்லை என்றால், சரிதான். அவருடைய கணவர் எனக்கு பக்கத்து ஊர் காரர் மற்றும் எனக்கு பழக்கமானவர் பிரதிவாதி கல்லூரி பேராசிரியை என்ற விபரம் எனக்குத் தெரியும். பிரதிவாதியின் கணவர் நெய்யூர் CSI cancer centre ல் Radiographer ஆக வேலை செய்தார் என்றால், அவர்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் இருந்து அந்த விபரங்களை நான் தெரிந்து கொண்டேன். பிரதிவாதியின் இரண்டு மகன்களும், Engineer கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். பிரதிவாதி குறிப்பிட்ட இடத்தில் கட்டிடம் கட்ட அவருடைய கணவர் என்னை அனுமதித்திருந்தார் என்றால், சரிதான். ஒப்பந்த பேச்சுவார்த்தை அனைத்தும் எனக்கும், பிரதிவாதியின் கணவருக்கும் தான் நடந்தது என்றால், பிரதிவாதி அவருடைய மகன்கள் ஆகிய குடும்பத்தினர் அனைவரின் முன்னிலையிலும் நடந்தது. எனக்கு இந்தியன் வங்கி முட்டம் கிளையில் வங்கி கணக்கு இருந்தது. நான் வருமான வரி செலுத்துபவர் தான். கட்டிடம் கட்ட பிரதிவாதி கொடுத்த பணம் பற்றிய விபரங்கள் என்னுடைய வருமான வரி கணக்கில் துலங்காது. எனது IT returns ல் பிரதி வாதி கொடுத்த பணம் பற்றிய விபரங்கள் பதிவு செய்யப்படவில்லை. பணமாக கொடுத்ததால் காட்டவில்லை. கட்டிடம் கட்டிய இடம் 21.750 சென்ட் என்றால், சரிதான். பிரதிவாதி கட்டிடம் கட்டிய இடத்தின் பழைய வீட்டை இடித்து விட்டு புதிதாக வீடு கட்ட ஏற்பாடு செய்தார் என்றால், சரியல்ல. 2019 ல் கட்டிட வேலை செய்ய துவங்கும் போது வாடகை வீட்டில் குடியிருந்தார் என்றால், எதிர் வீட்டில் குடியிருந்தார். வாடகை வீடா என்று எனக்கு தெரியாது. முதலில் கட்டிடத்தின் மதிப்பு ரூ.42,48,550/- என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால், சரிதான். பிரதிவாதி எனக்கு ரூ.32,30,000/- கொடுத்தார்கள். ஆரம்பத்தில் கட்டிடம் கட்டும் போது சதுர அடிக்கு ரூ.1,550/- என்றும் மொத்தம் 2,741 சதுர அடிகள் என்றும் குறிக்கப்பட்டது. கட்டிட வரைபடம் நான் தான் தயார் செய்தேன் என்றால், சரியல்ல. அவர்கள் Approved Building Plan கொடுத்தார்கள். கட்டிடம் கட்டும் போது 4296.95 சதுர அடி என்றும் அதில் சதுர அடிக்கு ரூ.1,525/- என்றும் குறிக்கப்பட்டது என்றால்,

சரியல்ல. அசல் Agreement–ல் சதுர அடிக்கு ரூ.1,525/– என்று குறிக்கப்பட்டது. முதலில் Initial Payment ஆக ரூ.32,30,000/– கொடுத்த பிறகு பல தவணைகளில் ரூ.8,00,000/– பிரதிவாதி கொடுத்தார் என்றால், சரியல்ல. ரூ.7,00,000/– தான் கொடுத்தார். 28.01.2019 ல் ரூ.1,00,000/– கொடுக்கவில்லை 24.01.2019 ல் ரூ.1,00,000/– கொடுத்தார். 2019 ல் கட்டிட வேலை தொடங்கி 2022 வரை வேலை செய்தேன் என்றால், 23.11.2019 வரை தான் வேலை செய்தேன். ஒழுங்காக வேலையாட்களை வைத்து முறையாக நான் கட்டிட வேலையை செய்யவில்லை என்றால், சரியல்ல. Ground floor மற்றும் மேல் தளங்களில் நான் தரைத்தளம் கட்டுமான பணியை செய்யவில்லை என்றால், சரியல்ல. 23.11.2019 ல் இரண்டாவது தளத்தில் Roof concrete போட்டு, Ground floor ல் உள்பக்க பூச்சு வேலைகளை செய்து முடித்தேன். 3 தளங்களிலும் நான் வெளிப்பக்க பூச்சு வேலைகளை செய்யவில்லை என்றால், சரியல்ல. ஜன்னல், கதவுகளை நான் பொருத்தவில்லை என்றால், சரியல்ல. 2 வது தளத்தில் Roof Concrete போட்ட போது பிரதிவாதி எனக்கு ரூ.13,10,000/– தராமல் காலம் தாழ்த்தினார். நான் Electrical வேலைகளில் நான் Preliminary work மட்டும் செய்தேன். சமயலறை, குளியலறைகளில் வேலை செய்யவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதி என்னை பணம் கொடுக்காமல், வேலை செய்ய விடாமல் அனுப்பிவிட்டார். வீட்டில் உள்ள Cupboard work செய்யவில்லை என்றால், சரியல்ல Casting work செய்திருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் நான் அங்கு வேலை செய்த போது எடுக்கப்பட்டவை என்றால்,

முதல் இரண்டு பக்கங்களில் உள்ள 4 புகைப்படங்களும் சரிதான்.
3 ம் பக்கம் உள்ள புகைப்படம் சரிதான்.
4, பக்கம் உள்ள புகைப்படங்கள் சரியல்ல.
5 பக்கம் உள்ள புகைப்படம் சரி.
6 ம் பக்கத்தில் உள்ள முதல் புகைப்படம் மட்டும் சரியல்ல.
7 ம் பக்கத்தில் உள்ள புகைப்படம் சரியல்ல.
8 ம் பக்கம் டைல்ஸ் ஒட்டுவதற்காக வரைந்து பூசி கொடுத்திருக்கிறேன்.
9 ம் பக்கத்தில் உள்ள புகைப்படம் சரிதான்.
10 ம் பக்கத்தில் உள்ள புகைப்படம் என்னை வேலை செய்ய விடாமல் இருந்த போது எடுக்கப்பட்டது.

<u>புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.1 ன் வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.</u>

08.02.2019 ல் நானும் பிரதிவாதியும் செய்து கொண்ட வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளின் படி நான் வேலைகளை முடிக்கவில்லை என்றால், அதற்கு பிரதிவாதி பணம் தரவில்லை. நான்

வேலையை முறையாக செய்யாமல் பணம் தரவில்லை என்று தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் கொடுத்த தொகைக்கு முழுமையாக நான் வேலைகளை முடிக்கவில்லை என்றால், சரியல்ல. 10.01.2020 போலீசில் நான் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்தேன். பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக போலீசாரை சுவாதினப்படுத்த முயன்றேன் என்றால், சரியல்ல. நான் போலீசில் புகார் கொடுத்து பிரச்சனை செய்து, கட்டிட வேலைகளையும் முறையாக செய்யாததால், ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ள அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரியல்ல. நான் முறையாக கட்டிட வேலை செய்யாததால், பிரதிவாதி அவருக்கு சொந்தமான வீட்டில் கட்டிட வேலையை தொடர்ந்தார் என்றாலும், எப்படியாவது பிரதிவாதியிடம் இருந்து பணத்தை வாங்க வேண்டும் என்று நான் செயல்பட்டேன் என்றால், சரியல்ல. இதன் காரணமாக பிரதிவாதி உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No.77/2024 என்ற வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக் கட்டளை பெற்றார்கள் என்றால், பின்னிட்டு அவ்வாறு உறுத்துக்கட்டளை பெற்றார்கள். நான் குறிப்பிடுவது போல பிரதிவாதி எனக்கு ரூ.14,00,000/- தர வேண்டியது இல்லை என்றாலும், நான் தவறான விபரங்களை கூறி வழக்கு செய்கிறேன் என்றாலும், சரியல்ல. பிரதிவாதியை கஷ்டபடுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.

# <u>Sub Court, Eraniel</u>

C.O.S. No.1/2025
Date: 12.02.2026.
PW2 - திரு. ஜாண்சன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். வாதி வின்செண்ட் ஜார்ஜ் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால், சரிதான். வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. வழக்கின் விபரங்கள் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால், தொடக்கத்தில் இருந்தே நான் அந்த வீட்டின் கட்டுமானத்தில் வேலை செய்தேன். எனது அன்றாட அலுவல்களை குறித்து வைக்க நோட்டு புத்தகம் எதுவும் பராமரிக்கவில்லை. வழக்கு சம்பந்தமான கட்டிடத்தில் நான் வேலை பார்த்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான். பிரதிவாதியின் கட்டிடத்தில் நான் வேலை செய்ததாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் உள்ளூரில் கட்டிட வேலை செய்பவர் இல்லை என்றாலும், கேரளாவில் வேலை செய்கிறேன் என்றாலும், சரியல்ல. பிரதிவாதியின் நிலத்தில் கட்டிட கட்ட 24.01.2019 ல் கட்டிட ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு கான்ட்ராக்டர் வின்செண்ட் ஜார்ஜ் சொன்னார். எனக்கு சென்ட்ரிங் வேலை மட்டும் தெரியும். ஒரு கட்டிடத்தில் எப்பொழுதும் சென்ட்ரிங் வேலை இருக்காது என்றால், சென்ட்ரிங் வேலை முடியும் வரை நான் அங்கு வேலை பார்த்தேன். வாதிக்கு பிரதிவாதி எந்த தேதிகளில், எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. எனக்கு பிரதிவாதியையும் தெரியாது, வழக்கின் விபரங்கள் பற்றியும் தெரியாது என்றாலும், நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.

# **Sub Court, Eraniel**

C.O.S. No.1/2025
Date: 12.02.2026.
PW3 - திரு. பால்ராஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் பெயர் தாவீது. நான் குமரன்குடியில் தாமசிக்கிறேன். நான் ஆதார் கார்ட் எதுவும் கொண்டு வரவில்லை. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. வின்சென்ட் ஜார்ஜ் கூப்பிட்டதால் வந்தேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதியை நான் பார்த்தது கிடையாது. நான் கொத்தனார் வேலை செய்கிறேன். நான் வின்சென்ட் ஜார்ஜ் உடன் கொத்தனார் வேலை செய்கிறேன். நான் கட்டிட வேலை செய்ய பதிவு செய்யவில்லை. எனக்கு வங்கி கணக்கு இல்லை. வின்சென்ட் ஜார்ஜ் தற்போது 2 கட்டிட வேலை செய்கிறார். நான் வின்சென்ட் ஜார்ஜ் உடன் சேர்ந்து கொத்தவேலை செய்யவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறார்கள் என்றால், வின்சென்ட் ஜார்ஜ் காசு கிடைக்கும் என்று சொன்னார். இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் உண்மைக்கு புறம்பாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.